**O.S.No. 124/2025 நாள் 09.07.2026 PW 1 – திருமதி. சாந்தகுமாரி .**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (பிரதிவாதிதரப்பில்)

பிரதிவாதிக்கும் எனக்கும் சுமார் 30 வருட கால பழக்கம் இருக்குமா என்றால் இருக்கும். பிரதிவாதி வீட்டின் முன்புதான் நான் கரும்புசாறு கடை வைத்துள்ளேன் என்றால் தற்சமயம் 1 ½ வருட காலமாக வைத்துள்ளேன். பிரதிவாதி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவர்கள் வீட்டு பக்கம் நாங்கள் மளிகை கடை வைத்துள்ளோம். கரும்புசாறு கடைக்கு மாத வாடகை எவ்வளவு என்றால் அவர்கள் இடத்திற்குள் வைக்கவில்லை, ரோட்டில்தான் வைத்துள்ளோம், அதனால் வாடகை எதுவும் கிடையாது. நான் பணத்தை வட்டிக்கு கொடுத்தேனா அல்லது கிரைய ஒப்பந்தத்திற்காக கொடுத்தேனா என்றால் கிரைய ஒப்பந்திற்கு கொடுத்தேன். நான் கிரைய ஒப்பந்தத்திற்காக பணம் கொடுத்திருந்தால் ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றால் பிரதிவாதி அவரது இடத்தின் மதிப்பு மிகவும் அதிகமாகிவிட்டது என்றும், அதனால் கிரையம் கொடுக்க முடியாது என்றும், எதுவேண்டுமானாலும்செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதால் கிரையம் கேட்கவில்லை. அந்த இடம் ஏற்கனவே அடகு பிரச்சனையில் காந்திமதி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு தெரிந்த நான் ஒரு பெரிய தொகையை எந்தவிதமான பதிவு அலுவலகத்திலும் பதியாமல் கொடுத்துள்ளேன் என்றால் ஒருமாதத்தில் பத்திரம்முடித்து தருவதாக சொன்னார். ரூ.100 பத்திரத்தில் ஒப்பந்தம் போட்டதில் என்னுடைய கணவரும், பிரதிவாதியின் மகனும் அவரது வீட்டில் வைத்து கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான்.

என்னிடம் அந்த இடத்தை வாங்குவதற்கு என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு வங்கி கணக்குகளையும், வேறு ஆவணத்தையோ தாக்கல் செய்யவில்லை என்றால் நகையை அடமானம் வைத்து பணம் கொடுத்தேன் அதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேன், மற்றவைகளை வேண்டுமென்றால் வாங்கி கொடுக்கலாம். நான் சொல்லுமாறு நகையை அடமானம்வைத்தற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு யாரிடமும் கடன் பெற்றேனா என்றால் என் அண்ணன், அக்காவிடம் கடன் வாங்கி கொடுத்தேன். வேறு யாரிடமும் கடன் வாங்கி கொடுத்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு சீட்டு மட்டும் கொடுத்துள்ளேன். நான் சொல்லும் சீட்டும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யார் யாரிடம் நான் கடன் வாங்கினேன் என்றும் பிராதில் சொல்லவில்லை என்றாலும், எங்கு எங்கு நகையை அடமானம் வைத்தேன் என்றும் பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, காவல்துறை புகாரிலோ சொல்லவில்லை என்றால் கொடுத்துள்ளேன். எனக்கு மாத வருமானம் கரும்புசாறு கடையிலும், மளிகை கடையிலும் வரும் என்றால் மளிகை கடையில் ரூ.15,000/-மும், கரும்புசாறு கடையில் ரூ. 5,000/-மும் கிடைக்கும், நான் சொந்த வீட்டில் உள்ளேனா என்றால் சொந்த வீட்டில் உள்ளேன். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள். ஒரு பையன் ஒரு மாதமாக வேலைக்கு செல்கிறான். 2 பேர் கல்லூரி படிக்கிறார்கள். கடந்த 4,5 வருடங்களாக 3 பிள்ளைகளை படிக்க வைக்க செலவு ஆகியிருக்கும் என்றால் என் அம்மா இறந்துவிட்டதால் என் அப்பா மாதம் ரூ. 10,000/- செலவுக்கு கொடுப்பார்கள். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 6 பேர்கள். 6 பேருக்கும் என் அப்பா மாதம் ரூ. 10,000/- கொடுப்பாரா என்றால் என் அப்பா என்னுடன்தான் இருந்தார். அதனால்

ரூ.10,000/– கொடுப்பார். என்னுடைய அப்பாவின் மருந்து செலவு, சாப்பாடு செலவிற்கு எல்லாம் ரூ.10,000/– செலவாகிவிடும் என்றால் அவர் ரூ.20,000/– பென்சன் வாங்கினார், அவர் ரூ.10,000/– வைத்துக்கொண்டு எனக்கு ரூ.10,000/– கொடுப்பார். எத்தனை வருடமாக என் அப்பா என்னுடன் இருக்கிறார் என்றால் 15 வருடங்களாக என்னுடன் இருக்கிறார். என் அப்பா தருகிற ரூபாயை பிள்ளைகளுக்கு பீஸ் கட்டுவதற்கு வைத்துக்கொள்வேன். எங்களுக்கு ஒரு மாதத்தில் கிரையம் முடித்து தருவதாக சொல்லிவிட்டு, கிட்டதட்ட 1 ¼ வருடமாக கிரையம் முடித்து தரவில்லை என்று அதை மீட்பதற்கு என்ன என்ன செய்தேன் என்று பிராதிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் அந்த இடம் அந்த அக்கா பெயரில்தான் உள்ளது, அந்த அக்காவிடம் கேட்கும் பொழுதெல்லாம் 10 நாட்களில் முடித்து தந்துவிடுகிறேன் என்று காலம் கடத்தி வந்தார். பணத்தை திருப்பி தருவதாக சொன்னாரா என்றால் இடத்தை என்பெயருக்கு கிரையம் முடித்து தருவதாக சொன்னார். அந்த பத்திரத்தில் பின்பக்கத்தில் ரூ.35,000/– கூடுதலாக பெற்றதாக சொல்லி கையெழுத்து பெறப்பட்ட சமயத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் பாஸ்கர் இருந்தார். இந்த விவரத்தை பிராதிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு ரூ.100 பத்திரத்தில் எழுதியதை யாரிடம் வாங்கினேன் என்றால் புரோக்கர் அண்ணன் வாங்கி வந்தார். எந்த புரோக்கர் என்றால் பாஸ்கர் அண்ணனுடன் மற்றொரு அண்ணன் சென்றிருந்தார். அந்த ரூ.100 பத்திரத்தில் யார் டைப் செய்தார் என்றால் பாஸ்கர் என்பவர் அடித்து வந்தார். பத்திரத்தில் வழக்கறிஞர் யாரும் கருத்து தெரிவித்தார்களா என்றால் இல்லை. அவர்கள்தான் அடித்து வந்தார்கள். 21.11.2023 அன்று நான் பணம் கொடுத்தேன். பத்திரம் எழுதியது எப்போது என்றால் 12 வது மாதம்

எழுதினார்கள். பத்திரம் எழுதுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே பணத்தை கொடுத்துவிட்டேன் என்று பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, காவல்நிலைய புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராதிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் 11.12.2023 அன்றே பணத்தை கொடுத்து அன்றே பத்திரத்தை எழுதி வாங்கியதா கூறியுள்ளேன் என்றால் 11.12.2023 அன்று பணத்தை பெற்றுக்கொண்டார்கள், பின்னர் அம்மா, மகளுக்குள் என்ன இருக்கிறது என்று சொல்லி 15 நாட்கள் கழித்து பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். காவல்துறை புகாரில் 08.12.2023 அன்றுதான் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் 21.11.2023 அன்று பணத்தை பெற்றுக்கொண்டார்கள். புகாரில் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் எங்கு இருந்தார் என்றால் எனது கணவர்தான் சென்றார். நான் தொகையை யாரிடம் கொடுத்தேன் என்றால் டேவிட் தனசேகரன் அலுவலகத்தில் வைத்து நான் பணத்தை கொடுக்க மகன் காந்திமதி அம்மாவிடம் கொடுத்தார். காவல்துறை புகாரில் பிரதிவாதியின் மகன் செந்தில்ஆறுமுகத்திற்கு தெரிந்தால் கொன்று விடுவான் என்று காவல்துறை புகாரியில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு 2025 வரைக்கும் முடியாமல்தான் இருந்தது என்றால் சரிதான். கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்று 2023 லேயே கிரைய ஒப்பந்தத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஏலம் வந்துவிட்டதால் பணத்தை கொடுத்தேன் என்று சொல்லியுள்ளநிலையில் நீதிமன்றத்திலேயே பணம் கட்டி சொத்தை கிரையம் பெற்றிருக்கலாம் என்றால் பிரதிவாதி தன்னிடம் 5 செண்ட் உள்ளது என்றும், அதில் ½ செண்ட் கிரையம் கொடுப்பதாகவும் சொன்னார். தற்போதும் கரும்புசாறு கடைக்கு வாடகைக்கு கொடுக்கிறேனா என்றால் அது ரோட்டில் உள்ளது.

பிரதிவாதியிடம் மாதம் ரூ.5,000/- என்று சொல்லிதான் கடை வைத்தேன் என்றால் இல்லை, கடை வைத்து 1 ½ வருடம் ஆகிறது. பிரதிவாதி மாநகராட்சியில் புகார் கொடுத்து கடையை காலி செய்ய வேண்டியது வரும் என்றால் பரவாயில்லை. நான் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டி ரூ. 12,00,000/-த்திற்கு எழுதி கூடுதலாக ரூ. 35,000/-, ரூ.10,000/- ரூ. 15,000/- ரூ. 11,000/- என்று தனித்தனியாக வாங்கியதாக இட்டுகட்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 10.02.2024 வழக்கை முடிப்பதற்காக ரூ. 10,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளநிலையில் அதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த அம்மாதான் கொடுக்க சொன்னார்கள். 14.07.2024 ல் சர்வே எண் எடுப்பதற்கு ரூ.30,000/- வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளநிலையில் அதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சர்வே எண் வாங்குவதற்கும், அவரது இடத்தை மற்றொரு நபருக்கு அடமானம் வைப்பதாக சொல்லியும் பணத்தை வாங்கினார்கள். அவரது இடத்தை மற்றொரு நபருக்கு அடமானம் வைப்பதாக பணத்தை வாங்கினார்கள் என்று பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. மாநகராட்சியில் போய் டவுண் சர்வே நம்பர் உடனே கொடுத்துவிடுவார்கள் என்றும், அதற்கு ரூ. 30,000/- கொடுத்தேன் என்று சொல்வது பொய் கதையாக இட்டுகட்டி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞருக்கு கொடுப்பதற்கு ரூ.11,000/- பெற்றதாக சொல்லும் நிலையில் எந்த வழக்கறிஞருக்கு என்று சொல்லப்படவில்லை என்றால் சிவன் கோவிலுக்கு அருகே சுவீட் கடை வைத்திருக்கும் வழக்கறிஞருக்கு எனது கணவரும், பாஸ்கரும் சென்று கொடுத்தார்கள். பிரதிவாதி உடன் வரவில்லை என்றால் பிரதிவாதி சொன்னதன்பேரில் சென்று கொடுத்தோம். நான் மேற்சொல்லும் சிறு சிறு

செலவுகளுக்கான தொகை கொடுத்த எந்த சமயத்திலும் பிரதிவாதி உடன் வரவில்லை என்றால் பிரதிவாதி சொன்னதன்பேரில் ரூ.30,000/– கொடுக்கும்போது தனம் வந்தார். ரூ.11,000/– கொடுக்கும்போது பாஸ்கர் வந்தார். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கிரையம் முடிப்பதற்கு தயாராக உள்ளேன் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ– 5 ஆன வில்லங்கசான்றிதழ் பிரேமா என்பவர் பெயரிலும் ஜப்தி செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியும், பிரேமா என்பவர் காந்திமதியின் அக்கா, 2 பேரும் தலா ரூ.3,00,000/ போட்டு லெட்சுமிஅம்மாளுக்கு ரூ.6,00,000/– கொடுத்திருந்தார்கள். நான் எனது பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ பிரேமா என்பவரின் பெயர் சொல்லவில்லை என்றால் அவரின் பணத்தை காந்திமதி பெற்று லெட்சுமி அம்மாளுக்கு கொடுத்ததால் சொல்லவில்லை. நான் 80 வயதான பிரதிவாதியிடம் நல்லவராக பழகி ரூ.15,00,000/–த்திற்கு மேல் போக கூடிய இடத்தை குறைந்த விலைக்கு வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தில் ஏமாற்றி கையெழுத்தி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்பு பிரதிவாதியின் மகன் சத்தம் போட்டதால் அதிக வட்டி கணக்கு எழுதி பொய்யான செலவு கணக்கு எழுதி இந்த நீதிமன்றம் மூலம் பணம் பெறுவதற்கு முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. கரும்புசாறு கடைக்கு மாதம் ரூ.5,000/– என்று வாடகை பேசியிருந்தார்கள் என்றாலும், நான் கடந்த 3 வருடங்களாக மேற்படி வாடகை தொகை கொடுக்காமல் மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கொடுத்த பணத்திற்கான வட்டியாக மேற்படி வாடகை தொகையை கழித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.